



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி மாணவர் அணி பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ஜனார்த்தனன், மாணவர் அணி அமைப்பாளர் ர.பிரபு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னை மெரினா கடற்கரை (விவேகானந்தர் இல்லம் எதிரில்). மற்றும் பெசன்ட் நகர் கடற்கரைகளில் 32 அடிக்கு × 18 அடி என்ற அளவில் பிரம்மாண்டமான எலி.இ.டி திரையில் நேற்று (23.2.2025) துபாயில் நடைபெற்ற இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியின் ஒளிபரப்பை ஆயிரக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

### பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்!

# பல்லாவரம் வடக்குப் பகுதி கழக செயற்குழுக் கூட்டம்!

## தீர்மானங்களை விளக்கி – பகுதிக் கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை அறிக்கை!

*பல்லாவரம், பிப்.24-*

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கட்டளையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் (23.2.2025 - ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9 மணி அளவில் ச.சிவக்குமார் தலைமையில் பகுதி கழக நிர்வாகிகள் வ.முத்து, எஸ்.நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி கலந்து கொண்டு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை மார்ச் 1 முதல் எவ்வாறு பகுதி முழுவதும் சீரோடும் சிறப்போடும் கொண்டாடுவது என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் பொதுக் குழு உறுப்பினர், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகர பிரதிநிதிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், வட்ட அணிகளின் செயலாளர்கள், நிர்வாகிகள், தேர்தல் முகவர்கள், பி.எல்.ஏ.2 தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை குறித்து பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை பேசியது வருமாறு:-

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைப்படி பகுதி முழுவதும் எவ்வாறு மார்ச் -1 முதல் நமது தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள் வருமாறு:-

வருகிற மார்ச்-1 அன்று பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் தன் உழைப்பால் நாம் தாய் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்துவதற்கும் தமிழ்நாடு மக்கள் சமூகத்திலும் பொருளாதாரத்தை உயர்ந்த நிலை அடைவதற்கும் பாடுபடும் திராவிட மாடல் முதல்வர் தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பல்லாவரம் வடக்கு பகுதி கழகத்துக்கு உட்பட்ட அனைத்து வட்டங்களிலும் கழகக் கொடியேற்றி ஒளியும் ஒலிய அமைத்து பொது மக்கள் இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கியும் நல திட்ட உதவிகள் செய்தும் அனைத்து வட்டங்களிலும் தலைவர் அவர்களின் பிறந்தநாளை மிகவும் எழுச்சியுடன் கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கழக அரசியல் சாதனைகளை விளக்கி பல்லாவரம் வடக்கு பகுதியில் உள்ள வட்டங்கள் தோறும் தெருமுனை கூட்டங்கள் நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

வருகிற மார்ச் 1-3-2025 அன்று நாம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளன்று முதல் எதிர்வர இருக்கின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் நாம் கழகம் மீண்டும் ஏழாவது முறையாக ஆட்சி அரியணையில் அமர்த்திட நம் பகுதி முழுவதும் கழகத்திற்கு உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள கழக நிர்வாகிகள் பாக நிலை முகவர்கள் மற்றும் பாக நிலை உறுப்பினர்கள் கழகத் தோழர்கள் அனைவரும் தீவிரமாக 2026 தேர்தல் வரை விடாது களப்பணி செய்து மீண்டும் கழக ஆட்சி அமைத்திட உறுதி ஏற்று பணி செய்வோம் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு 20-3-2025 வியாழக்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் பல்லாவரம் ரயில்வே ஸ்டேஷன் அருகில் உள்ள வேம்புலி அம்மன் கோயில் திடலில் பல்லாவரம் வடக்கு பகுதி கழக சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் சீருடன் சிறப்போடும் நடத்துவது எனவும் இக்கூட்டத்தில் திண்டுக்கல் லியோனி, மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் கூட்டத்தில் பகுதி கழகத்தில் இருந்து ஏராளமானோர் திரண்டு வந்து கூட்டத்தை சிறப்பிப்பது என தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வருகின்ற 23-3-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று பகுதி கழகத்தின் சார்பாக மாபெரும் கபடி போட்டி பல்லாவரத்தில் நடத்துவது எனவும் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பகுதி கழக துணைச் செயலாளர் வ.முத்து நன்றி உரை கூறினார்.

### பகுதிச் செயலாளர் எஸ் மதன்மோகன் முன்னிலை!

# சேப்பாக்கம் 62 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் கே.மகேஷ் அறிக்கை!

*சென்னை, பிப்.24*

சேப்பாக்கம் 62 (அ) வட்டச் செயலாளர் கே.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேப்பாக்கம் பகுதி 62 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பகுதி கழக செயலாளர் மண்டல க்குழுத் தலைவர் எஸ். மதன்மோகன் முன்னிலையிலும் வட்ட அவைத் தலைவர் எஸ்.ஜெய்சங்கர் தலைமையில் இன்று (24.2.2025 திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் 25/12A தர்ம ராஜா கோவில் தெருவில் நடைபெறுகின்றது.

எனவே இக்கூட்டத்திற்கு வட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகள் வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு கே.மகேஷ் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (24.2.2025) திங்கள் கிழமை மாலை 5 மணியளவில் கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், தொகுதிப் பொறுப்பாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்றுச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள் : கழகத் தலைவர் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.





காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி மதுராந்தகம் நகர பாக முகவர்கள் பாக நிலை குழு உறுப்பினர் ஆலோசனை கூட்டம் மதுராந்தகம் நகர செயலாளர் கு.குமார் தலைமையில் ஆர்.ஏ.ஆர். திருமண மண்டபம்தில் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மதுராந்தகம் தொகுதி பொறுப்பாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன் ஆகியோர் ஆலோசனை வழங்கினர். இதில் காஞ்சி தெற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் –மதுராந்தகம் நகர மன்ற தலைவர் மலர்விழிகுமார், நகர கழக நிர்வாகிகள், அவைத்தலைவர் பொன்.கேசவன், நகர கழக துணை செயலாளர்கள் ஆர்.பரணி, எம்.என்.மூர்த்தி, கோமதி, கபிலன், என்.சங்கர், குருமூர்த்தி, என்.சங்கர், ஆர்.பரணி, எம்.ராஜா, மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகம் முகவர்கள், பாக நிலை குழு உறுப்பினர், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அறிக்கை!



*கடலூர், பிப்.24-*

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம். வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இன்று (24.02.2025 - திங்கள்கிழமை) காலை 11 மணி அளவில் குறிஞ்சிப் பாடி திமுக அலுவலகத்தில் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் து.தங்கராசு தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இன்னால் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் மாவட்ட நிர்வாகி கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

மார்ச் 1 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது சம்பந்தமாக.

கழக ஆக்கப் பணிகள் சம்பந்தமாக.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# நெல்லை மத்திய மாவட்டக்கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*நெல்லை, பிப்.24-*

நெல்லை மத்திய மாவட்ட கழக செயல் வீரர்கள் கூட்டம் இன்று (24 ஆம் தேதி) பாளையங்கோட்டை ரஹ்மத் நகர் இதயா மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு பங்கேற்று சிறப்பிக்க உள்ளார் என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் எம். எல்.ஏ. அறிக்கையில் கூறியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டு தலின்படி இன்று (24.02.2025 - திங்கள் கிழமை) காலை சரியாக 10.00 மணிக்கு,மாவட்ட நீதிமன்றம் எதிரிலுள்ள, பாளையங்கோட்டை ரஹ்மத் நகர்,இதயா மஹால் திருமண மண்டபத்தில், நெல்லை மத்திய மாவட்டத்தின் செயல்வீரர்கள் கூட்டம் நெல்லை மத்திய



மாவட்ட அவைத் தலைவர் வி.கே.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார்.

நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள்,மாநகர நிர்வாகிகள், பகுதி கழக, பேரூர் கழக நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள், வட்ட கழக , கிளை கழக நிர்வாகிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,பாக முகவர்கள்,கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சிகள் தொடர்பாக.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் , பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (24-02-2025 . திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி,ஸ்டாரன்ஸ் சாலை எம்.கே.டி மகாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,இந்நாள்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள்,பகுதிக் கழகச் செயலாளர்கள்.. ,பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்: கழக ஆக்கப்பணிகள்**

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை தெற்கு மாவட்டம்,வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம் அயப்பாக்கம் பகுதியில் நடைபெற்ற பாக முகவர்கள் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் துரை வீரமணி தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கழக வர்த்தக அணி இணை செயலாளர் பி.டி.பாண்டி செல்வம் பாக முகவர்களின் பணிகள் குறித்து கருத்துரை வழங்கிய போது எடுத்த படம் .அருகில் ஒன்றிய கழகம் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.